www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

Reg.No 1 1 3 1 6

## பதினொன்றாம் வகுப்பு

## தமிழ்

*நேரம்: 3.00 மணி* *மதிப்பெண்கள்: 90*

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க :

அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சு மொழியும் கவிதை மொழியும்

2. தவறான இணையைத் தேர்வு செய்க:

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
இ) கடல் + அலை - உயிர் + மெய்
ஈ) மண் + வளம் - மெய் + மெய்

3. மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு - ஆசிரியர் யார்?

அ) ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. ஆ) வெ.இறையன்பு இ.ஆ.ப.
இ) மதுசூதனன் ரெட்டி இ.ஆ.ப. ஈ) வெ.திருப்புகழ் இ.ஆ.ப.

4. பொருத்துக :

அ) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர்
ஆ) முன் நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை
இ) ஆதிநீடல் - பைங்கூழ்
ஈ) இனமிகல் - காரிருள்

5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

6. காவடிச்சிந்துக்குத் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

7. ஒட்டுப்போடாத ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் .......... இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

8. ஏடு, சுவடி, பனுவல், புத்தகம் முதலிய சொற்கள் தரும் பொருள் ______.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

9. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை யார்?

அ) சாமுவேல் பெப்பிசு ஆ) ஆனந்தரங்கர்
இ) லெபூர் தொனே ஈ) இராபர்ட் கிளைவ்

10. Sailor - என்பதன் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) மாலுமி ஆ) ஆவணம் இ) ஒப்பந்தம் ஈ) இனக்குழு

11. *மாண்ட* தவளை - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக :

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) உரிச்சொல் ஈ) தொழில் பெயர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

12. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மா நாமால் வெளியிடப்பட்டது ; கவிதை கிரீடம் என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி
ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா
ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

13. அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வடியில் உள்ள சொற் பிழைகளின் திருத்தம்

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்
ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில்
ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

14. யாரே உன்னைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

## பகுதி - II

### பிரிவு - அ

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3 x 2 = 6**

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

16. மதீனா நகரம் ஒரு பொன்னகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை யாவை?

18. 'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யாருக்குள' - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2 x 2 = 4**

19. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்படுகிறது?

20. உ.வே.சா. பயின்ற கல்வி முறை குறித்து குறிப்பு வரைக.

21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

## பகுதி - இ

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி: 7 x 2 = 14**

22. *பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக :*

அ) விசா ஆ) பாஸ்போர்ட்

23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :*

பொரி, பொறி

24. *தமிழ்ச்சொல் கண்டறிக :*

அ) Mass Drill ஆ) Average

25. *பகுபத உறுப்பிலக்கணம் தருக :*

அ) ஈன்ற *(அல்லது)* ஆ) அலர்ந்து

26. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :*

அ) கொழுஞ்சோறு ஆ) மேலவை

27. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக :*

கானல்நீர் *(அல்லது)* எதிர்நீச்சல்

28. ஆசிரியப்பாவுக்குரிய தளைகள் யாவை?

29. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க :*

வைகை *(அல்லது)* நஞ்சிருக்கும்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



30. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக :*
சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

## பகுதி - III

### பிரிவு - அ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2 x 4 = 8

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் கூறுகிறார் குறிப்பிடுகிறார்?
32. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?
33. 'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு - ஆ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2 x 4 = 8

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளியும் பெண் கல்வியும் குறித்து எழுதுக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. தாமஸிகம் என்றால் என்ன?

### பிரிவு - இ

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3 x 4 = 12

39. "மருந்தாகித் தப்பா மரற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்" *இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக.*

*(அல்லது)*

வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. *அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.*
   1. வேவு பார்த்திடுவான் ; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) ________.
   2. அறிவைத் தேடிப் போகுமிடம் ; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ________.
   3. வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது. (மானம்) ________.
   4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி ; பட்டம் வாங்கினவன் (தாரி) ________.

41. *இலக்கிய நயம் பாராட்டுக :*
*மையக் கருத்தினை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.*

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
　　பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
　　மாதர் அறிவைக் கொடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
　　காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
　　பேதமை யற்றிடும் காணீர் ! - பாரதியார்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



42. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக :*

இக்கரைக்கு அக்கரை பச்சை *(அல்லது)* பேராசை பெருநட்டம்

43. *தமிழாக்கம் தருக :*

1. Winners don't do different things, they do things differently.
2. Roads were made for journeys not destinations. - Confucius
3. Look deep into nature and then you will understand everything better. - Albert Einstein
4. Simplicity is nature's first step, and the last of art. - Philip James Bailey

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3 x 6 = 18**

44. அ) நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல் வழி மதிப்பீடு செய்க.

*(அல்லது)*

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.

45. அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

*(அல்லது)*

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துக்களைச் சிதறாது விளக்குக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

*(அல்லது)*

அ) நர்த்தகி நடராஜனின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக : 4 + 2 = 6

அ) 'உண்டால் அம்ம' எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) "பெரிது" என முடியும் குறள்.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com